செ.கு.எண் : 90 நாள் : 29-02-2012.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 29.2.2012

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், சல்வார்பட்டி கிராமத்தில் இயங்கி வரும் தனியார் பட்டாசு தொழிற்சாலையில் 27.2.2012 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில் சாத்தூரைச் சேர்ந்த திரு. சுப்பையா என்பவரின் மகன் திரு. முருகன் மற்றும் படந்தால் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்புராஜ் என்பவரின் மகன் மாரிக்கண்ணன் ஆகிய இருவரும் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 28.2.2012 அன்றும், ஆண்டாள்புரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் திரு. பழனி மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் 29.2.2012 அன்றும் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்தில் அகால மரணமடைந்த முருகன், மாரிக்கண்ணன் மற்றும் பழனி ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9